## அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் - 2017

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (கூட்டுத்தாபனம்) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஏஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எஸ்எல்எவ்ஆர்எஸ் 10 - ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்:** கூட்டுத்தாபனத்தின் முழுமையாக சொந்தமாக்கப்பட்ட துணைக் கம்பனியான தேவுசொவா (தனியார்) கம்பனியில் ரூபா 9,210,740 முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களொன்று மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், துணைக் கம்பனிகளிடமிருந்து பெறவேண்டியவையாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 34,802,842 வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. எனினும், இந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு ஆவணச்சான்றெதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) **எல்கேஏஎஸ் 01 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:** ரூபா 5,801,279 வரவு மீதியையும் மற்றும் ரூபா 50,990,962 செலவு மீதியையும் முறையே கொண்ட ஆரம்ப முற்பணங்கள் நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முறையே செலவு மீதிகள் மற்றும் வரவு மீதிகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:** நியமத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு தவறியமையால், ரூபா 2,318,571, ரூபா 3,558,000 மற்றும் ரூபா 43,623,436 பெறுமதியான முறையே 42 அலுவலக உபகரணம், 07 மோட்டார் வாகனங்கள் மற்றும் 54 இயந்திர உருப்படிகள் போன்றன முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் அவை தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கணக்காய்விற்கு கிரயம் சமர்ப்பிக்காத இயந்திரங்களின் 93 உருப்படிகள் மற்றும் மோட்டார் வாகனமொன்று அவை முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தபோதும், தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஈ) **எல்கேஎஸ் 39 – நிதிக்கருவிகள் இனங்காணல் மற்றும் அளவிடுதல்:** ரூபா 188,544,980 தொகையான வியாபார மற்றும் ஏனைய வருமதி மீதிகள் காலக்கழிவிற்காக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இநத மீதிகள் நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டுகளின் போது இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 115,003,889 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி மீதான மிகைக் கட்டணங்களாக செலுத்தப்பட வேண்டியிருந்தன. எவ்வாறாயினும், ஏற்பாடுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அட்டுறு செலவினங்களில் ரூபா 23,598,467 கூட்டுத்தொகான வரவு மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் அட்டுறு செலவினங்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வாடிக்கையாளர் கடன்களை தீர்த்தபோதும் சான்றுபடுத்தப்பட்ட சிட்டை இன்மையால் வரவு மீதியில் ரூபா 6,533,077 அசாதாரண கடன் மீதி அவதானிக்கப்பட்டது.

(ஈ) பொருளாதார சேவை கட்டணம் (ஈஎஸ்சீ) மற்றும் மிகையறவீடுகளின் செலுத்தவேண்டியவைகள் தவறான கணிப்பீட்டால் ரூபா 37,635,363 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. மேலும், 2014/2015 ஆம் மதிப்பீட்டாண்டிற்கான ரூபா 2,182,836 தொகையான ஈஎஸ்சீ செலுத்தவேண்டியவை மீதான தண்டப்பணத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட வற் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் வற் செலுத்த வேண்டிய பட்டியலிலும் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 825,850 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் 2016 யூலை 25 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம், வற் மீதான தண்டப்பண கட்டணங்களாக ரூபா 115,003,889 தொகை இருந்தது. எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம், இது ரூபா 28,849,344 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால், இரு மீதிகளிற்குமிடையில் ரூபா 86,154,545 தொகையான இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) நானாவித முற்பணங்கள், விலைக்கூறு வைப்புக்கள், ஏனைய வைப்புக்கள், இலங்கை மின்சார சபையிலுள்ள வைப்புக்கள் போன்றவற்றிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர்கள் காலக்கழிவிற்கும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட உரிய பட்டியல்களில் காட்டப்பட நேரோத்த மீதிகளிற்குமிடையில் ரூபா 5,182,912 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள விடயம் ஒவ்வொன்றிற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் சான்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | தொகை<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| (அ) | பிடித்துவைத்தல் வரி | 135,044,649 | பிடித்து வைத்தல் வரிச் சான்றிதழ்களின் பிரதிகள் |
| (ஆ) | வற் மீதிகள் | 561,047,472 | பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு |
| (இ) | என்பீரீயின் ஆரம்ப மீதிகள் | 5,335,464 | - மேற்படி - |
| | **மொத்தம்** | **701,427,585** | |

**2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 352,833,031 வியாபார கடன் மீதியில் ரூபா 25,212,161 தொகை மற்றும் ரூபா 27,938,734 தொகை முறையே 01 தொடக்கம் 05 வருடங்கள் மற்றும் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 70,717,854 கூட்டுத்தொகையான கொள்வனவு முற்பணங்கள் நிர்மாண முற்பணங்கள் மற்றும் நானாவித முற்பணங்களின் மீதிகளில் ரூபா 11,675,971 தொகை தீர்க்கப்படாமல் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(இ) வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 19,191,990 மற்றும் ரூபா 9,447,187 ஆரம்பிப்பு முற்பணங்களானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே நான்கு வருடங்களிற்கு மேலாகவும் ஆறு வருடங்களிற்கு மேலதிகமாகவும் கணக்குகளிலிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 503,047,861 கூட்டுத்தொகையான பிடிகாசில் 38 பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 100,916,486 தொகையொன்று 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. மேலும், ரூபா 39,347,662 கூட்டுத்தொகையான 40 செயற்திட்டங்கள் தொடர்பிலான பிடிகாசு 3 வருடங்களிற்கு மேலான காலப்பகுதிக்காக நிலுவையாகவிருந்தது. 8 செயற்திட்டங்கள் பரஸ்பர ரீதியில் நிறுத்தப்பட்டிருந்த போதும், ரூபா 21,408,189 கூட்டுத்தொகையான பிடிகாசு மீதிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்தது.

(உ) வாடிக்கையாளர்களிடமிருந்தான ரூபா 157,934,872 கூட்டுத்தொகையான தாமதக் கட்டணங்களில் ரூபா 107,304,615 தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நான்கு வருடங்களிற்கு மேலாகவிருந்தது.

(ஊ) ரூபா 310,744,601 தொகையான அட்டுறு செலவினங்கள் மூன்று வருடங்களிற்கு மேலாக தீர்க்கப்படாமல் நிலுவையாகவிருந்தது. ஆகையால், அத்தகைய செலவினங்களின் உண்மைத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகவிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 20,800,000 கடன் மீதி மற்றும் அதற்கான ரூபா 93,511,060 தொகையான வட்டி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியிருந்தது. எனினும், அத்தகைய நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு எந்தவித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதி தொடர்பிலான ரூபா 717,253,475 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி(வற்) மற்றும் ரூபா 28,849,344 கூட்டுத்தொகையான அதற்கான தண்டப்பணம் மற்றும் ரூபா 7,144,502 கூட்டுத்தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் ரூபா 953,141 கூட்டுத்தொகையான அதற்கான மிகையறவீடுகள் மீளாய்வாண்டு இறுதிவரை இறைவரித் திணைக்களத்திற்கு திருப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் (திருத்தத்தின்) 02 ஆம் பிரிவு | ரூபா 28,371,278 மற்றும் ரூபா 13,654,032 தொகையான முறையே பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) மற்றும் அதன் மீதான மிகை அறவீடு 2017 திசெம்பர் 31 இறுதிவரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | 06 வருடங்களிற்கு மேலாக தேறாமலும் சமர்ப்பிக்கப்படாமலும் இருந்த ரூபா 1,725,909 மற்றும் ரூபா 1,533,131 பெறுமதியான 06 தேறாத மற்றும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 யூலை 01 இன் டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் தேவையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க பொதுத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், உபகரணங்கள் மற்றும் மென்பொருளிற்கான தனிப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 22,841,652 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 12,206,658 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 10,634,994 ஆன கடுமையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வங்கி மேலதிகப் பற்று மீதான வட்டிச் செலவினம், ஊழியர் நலன் செலவினங்கள், நட்டக்கழிவுக்கான ஏற்பாடு என்பவற்றின் அதிகரிப்பு இந்த நிலைமைக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.1.1 கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச் சேர்க்கை

கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதிச்சேர்கை 2015 ஆம் ஆண்டிலிருந்து சமச்சீராக குறைவடைந்தது. அதற்கிணங்க, கணக்காய்விற்கு பதிவழிக்கப்பட்ட ஊழியர் நன்மைகள், வரிச் செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்த பின்னர் 2015 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா 950,461,143 பெறுமதிச் சேர்க்கை 2016 ஆம் ஆண்டில் ரூபா 895,895,814 இற்கும், 2017 ஆம் ஆண்டில் ரூபா 795,648,070 இற்கும் குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2017 (சதவீதம்) | 2016 (சதவீதம்) |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 7.37 | 12.78 |
| இலாப எல்லை | 1.08 | 1.08 |
| விற்பனை மீதான நிர்வாகக் கிரயம் | 8.39 | 9.48 |
| விற்பனை மீதான நிதிக் கிரயம் | 5.05 | 4.58 |
| நடைமுறை சொத்து விகிதம் | 1.10 | 1.04 |
| திரவப் பரிசோதனை விகிதம் | 1.01 | 0.9 |

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த இலாப எல்லை 5.41 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதும் தேறிய இலாப எல்லை ஒரு சதவீதத்தால் மாத்திரம் குறைவடைந்திருந்தது.

(ii) விற்பனைக்குரிய நிர்வாகக் கிரயம் மற்றும் நிதிக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 1.14 சதவீதம் மற்றும் 23 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

முன்னெடுக்கப்பட்ட பொறியியலிற்கு தேவையான கொங்கிறீட்டை இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல், கொங்கிறீட்டை பலப்படுத்தல் மற்றும் கொங்கிறீட்டிற்கு அமுக்கத்தை வழங்குதல் கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமாகும். எனினும், கூட்டுத்தாபனத்தின் பாதிடப்பட்ட மதிப்பீடு மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்த உற்பத்தி மற்றும் விற்பனைகள் தொடர்பிலான பின்வரும் இலக்குகளை எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்பட்டிருக்கவில்லை.

**(i) உற்பத்தி 2017**

| தளத்தின் பெயர் | திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | அடையபபட்டிருக்காதது |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இரத்மலான | 153,486,720 | 135,584,764 | 17,901,955 |
| வொவிபிற்றிய | 169,111,995 | 85,884,060 | 83,227,935 |
| வீரஹன்தோட்ட | 130,815,600 | 90,177,205 | 40,638,395 |
| மதவாச்சிய | திட்டமிடப்படவில்லை. | 36,828,574 | - |
| **மொத்தம்** | **453,414,315** | **348,474,603** | **104,939,711** |

**(ii) விற்பனைகள் 2017**

| தளத்தின் பெயர் | திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | அடையபபட்டிருக்காதது |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இரத்மலான | 200,000,000 | 136,581,369 | 63,418,630 |
| வொவிபிற்றிய | 125,000,000 | 72,912,122 | 52,087,877 |
| வீரஹன்தோட்ட | 125,000,000 | 78,771,952 | 46,228,047 |
| மதவாச்சிய | 50,000,000 | 34,763,072 | 15,236,928 |
| **மொத்தம்** | **500,000,000** | **323,028,517** | **176,971,482** |

### 4.1.2 நிர்மாண ஒப்பந்தங்கள்

இலங்கை மற்றும் வெளிநாட்டிலுள்ள கட்டிடங்கள் சிவில் பொறியியல், ஏனைய கூட்டுமுயற்சிகளின் புலனாய்வு, முதலீடு, திட்டமிடல் வடிவமைப்பு, நிர்மாண செயற்பாடு மற்றும் முகாமைத்துவம் போன்றன கூட்டுத்தாபனத்தின் முதற்தர நோக்கமாகவுள்ளது. நோக்கங்கள் அடைவதற்கு கூட்டுத்தாபனத்தால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

(அ) நிலச்சரிவு, இடர் பாதுகாப்பு செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், மத்திய, ஊவா மற்றும் சபரகமுவ மாகாணங்களிலுள்ள பத்து இடங்களில் எதிர் அளவீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் தொடக்கத் திகதியானது 2017 மார்ச் 24 ஆக இருந்ததுடன், இது 2019 மார்ச் 22 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உதாரணம்: 728 நாட்களிற்குள் கூட்டுத்தாபனமானது இந்த வேலைகளை உப ஒப்பந்தமாக இத்தாலி கம்பனிக்கு வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 1,931 மில்லியனாகவிருந்த போதும், மொத்த வேலைகளில் ரூபா 140 மில்லியன் பெறுமதியான அல்லது 6.8 சதவீத வேலைகள் 2018 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 1,791 மில்லியன் பெறுமதியான மிகுதி வேலைகளை அடுத்துவரும் 11 மாதங்களிற்குள் பூர்த்தி செய்யும் சாத்தியத்தன்மை கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகவிருந்தது. உப ஒப்பந்தகாரரின் இயலளவானது இனங்கப்பட்ட காலப்பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு போதியற்றதாகவிருந்ததென செயற்திட்டத்தின் ஆலோசனையாளர் அறிவித்திருந்தார்.

(ii) ஏற்றுக்கொள்ளல் கடிதத்திலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம், உப ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீத பெறுமதியை செயலாற்றல் முறியாக கூட்டுத்தாபனம் பெற்றிருக்கவில்லை.

(iii) உப ஒப்பந்தகாரரின் நிதிப்பலம் மற்றும் தொழில்நுட்ப பலம் அவர்களை தெரிவு செய்கையில் கூட்டுத்தாபனத்தால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் மந்தமான செயன்முறைக்கு போதியற்ற மேற்பார்வை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் தாக்கத்தை செலுத்தியது.

(ஆ) பொது வைத்தியசாலலையின் இருதயநோய் பிரிவின் புனரமைப்புக்கள் 2015 திசெம்பர் 02 இல் சுகாதார அமைச்சால் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், இது 2016 யூலை 10 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புனரமைப்பு வேலைகள் 2018 ஏப்ரல் 09 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. பொது வைத்தியசாலையானது புனரமைப்பு வேலைகள் தாமதமாவதால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றதென வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(ii) கூட்டுத்தாபனமானது பெறுகை வழகாட்டிகளின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் சுகாதார அமைச்சுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபட தவறியிருந்தது.

(இ) ரூபா 65,124,932 மொத்தப் பெறுமதியான ஆறு ஒப்பந்த செயற்திட்டங்கள் அத்தகைய வேலைகளை செயற்படுத்தாமல் கைவிடப்பட்டதுடன் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தமலானை மற்றும் மதவாச்சிய கொங்கிறீட் தளங்கள் போன்றவை முன்னைய ஆண்டில் முறையே ரூபா 20 மில்லியன் மற்றும் ரூபா 3.2 மில்லியன் தேறிய இலாபத்தை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் முறையே ரூபா 23.6 மில்லியன் மற்றும் 2.1 மில்லியன் தேறிய நட்டத்தை ஏற்படுத்தியது.

(ஆ) பொருட்களினை வழங்கலிற்காக பெறப்பட்ட கட்டளைகள் பெறப்பட்டவுடன் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது கொங்கிறீட் உற்பத்திகளின் வழங்கலிற்காக பெறப்பட்ட ரூபா 71,598,000 பெறுமதியான கட்டளைகள் 2018 யூலை 30 இல் கணக்காய்வு திகதி வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான அமிற்றிஹல அஸ்பலற் தளத்தின் விற்பனை மற்றும் மொத்த நட்டம் முறையே ரூபா 47.56 மில்லியன் மற்றும் ரூபா 6.7 மில்லியனாகவிருந்தது. எனினும், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2969 சதவீத குறைவாகவிருந்தது.

(ஈ) பொலன்னறுவ அஸ்பலற் தளத்தால் மீளாய்வாண்டின் போது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 10,200,719 மொத்த நட்டம் ஏற்பட்டது. அதேநேரம் மீளாய்வாண்டின் போது வொபிற்றிய கிரசர் பொறியில் ரூபா 6,937,591 மொத்த நட்டம் அறிக்கையிடப்பட்டது.

## 4.3 நிதி முகாமைத்துவத்திலுள்ள செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2013 யூலை 01 ஆம் திகதிய பிஈடி/சீஓபி/15(56)/ஜீஎஸ்என்/விஓஎல் - 1 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று வசதி ரூபா 580 மில்லியனாக இருந்த போதிலும் முறையான கடன் அறவீட்டுப் பொறிமுறை மற்றும் தொழிற்படு மூலதன முகாமைத்துவ முறைமை என்பன இல்லாமை காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்குறிப்பிட்ட மேலதிகப்பற்று வசதியை விஞ்சி ரூபா 908 மில்லியன் வரை மேலதிகப்பற்று வசதியினை கூட்டுத்தாபனம் பெற்றிருந்தது. மேலும், இத்தகைய மேலதிக பற்று வசதிகள் முன்னைய ஆண்டில் முழுமையாக பயன்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் போது இந்த வங்கி மேலதிகப்பற்றுக்கள் தொடர்பில் ரூபா 111.6 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 908,175,280 வங்கி மேலதிகப்பற்று இருந்த போதிலும் ரூபா 67,526,650 கூட்டுமொத்தமான நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 116,028,219 தொகையான சேமிப்பு வைப்புக்கள் என்பனவும் கூட்டுத்தாபனத்தால் பேணப்பட்டிருந்தன.

## 4.4 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட புஜிமா அரச கூட்டுத்தாபனத்தின் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (கூட்டுத்தாபனத்தின் கூட்டுமுயற்சி கம்பனியொன்று) 2010 மார்ச் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு பெறவேண்டிய தொகை ரூபா 41,899,490 தொகையாகவிருந்ததுடன் அதற்கு பின்னர் எந்தவித கொடுக்கல்வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த நிலுவைகளை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலதிக நேர கொடுப்பனவிற்காக ஏற்படுத்தப்பட்ட கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 25 மில்லியனால் அல்லது 41 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) சில சந்தர்ப்பங்களில் முரண்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகளிற்காக அனுமதி கூட்டுத்தாபனத்தால் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. அதனால், மேற்கொள்ளப்பட்ட அத்தகைய வேலைகளுக்காக கொடுப்பனவுகளை செலுத்த தவறியிருந்த வாடிக்கையாளர்களிற்கு எதிராக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்க முடிந்திருக்கவில்லை.

**4.5 வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் வொபிபிற்றிய கொங்கிறீட் தளத்தில் ஏற்பட்ட ரூபா 633,414 காசு மோசடியில் உரிய தரப்பினரிடமிருந்து ரூபா 286,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனமானது 2017 ஆம் ஆணய்டிற்காக கூட்டுத்தாபனத்திற்குரிய உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக இயந்திரப் பிரிவிற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 739,000 காசோலை முற்பணமொன்றை வழங்கியிருந்தது. பின்னர், இந்த காசோலைகளானது குறித்த உதிரிப்பாகங்களின் கொள்வனவிற்கில்லாமல் அவரால் முறையற்ற ரீதியில் காசாக்கப்பட்டது. எனினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XLVII இன் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் அந்த உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தி சொத்துக்கள்**

---

(அ) ரூபா 101 மில்லியன் பெறுமதியான பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட அஸ்பலற் பொறியொன்று பொலனறுவையில் வைக்கப்பட்டிருந்தது. அந்தப்பொறியின் உற்பத்தி இயளளவு நாயொன்றுக்கும் 600 எம்ரீ அஸ்பலற் ஆகவிருந்தது. எனினும், அதற்குரிய இந்தப்பொறி மற்றும் உரிய உபகரணங்கள் 2014 இற்கு பின்னர் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டமையால் விளைவற்றிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 1,748,322 தொகையை கூலி மற்றும் பாதுகாப்பு செலவினங்களாக மீளாய்வாண்டின் போது செலவிட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் இரத்மலானையில் உள்ள பிரதான களஞ்சியங்கள் வாகன உதிரிப்பாகங்களின் குறைந்தளவு இருப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. பிரதான களஞ்சியங்களின் பாரிய பிரதேசம் விளைவற்றிருந்தது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

11 செயற்திட்டங்களின் ஒப்பந்த பெறுமதியை விட ஒப்பந்தத்தின் கிரயம் அதிகரித்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 115,210,487 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.8 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 489 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 654 ஆக இருந்தது. அதற்கிணங்க, கூட்டுத்தாபனத்தால் பல்வேறு பதவிகளுக்கு 165 ஊழியர்கள் மிகையாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ஆ) உயர் முகாமைத்துவத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக காலத்திற்குக் காலம் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். அதற்கிணங்க, சிரேஷ்ட முகாமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 02 பதவிகள் மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். ஆகையால், இது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை நேரடியாக பாதித்திருந்தது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 111 வெற்றிடங்கள் 2017 திசெம்பர் 31 வரையிலும் வெற்றிடமாகவிருந்தது.

(இ) 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுப்பின் 1.2 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும், பதவிகளை உருவாக்குதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமில்லாமல் மேற்கொள்ளப்பட முடியாத போதிலும் 168 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 61 அமைய ஊழியர்கள் இந்தப்பதவிகளிற்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் முகாமைத்துவ மற்றும் குறைந்த மட்ட பதவிகளுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும், 2012 மே 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/268/I ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம், எம்எம்1-2 வகைப்படுத்தலிலுள்ள பதவிகள் பிரதம உள்ளக கணக்காய்வாளர் பதவியை தவிர எம்எம்1-2 இற்கு உயர்த்தப்பட்டிருந்ததுடன் ஜேஎம் 1-1 இன் பதவி உள்ளக கணக்காய்வாளர் மீதி தவிர எம்எம்1-2 வகைப்படுத்தலுக்கு உயர்த்தப்பட்டிருந்தது. இதற்கான காரணம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(உ) வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கு ஐந்து ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். 2003 இன் 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தகைய உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் உரிய நிறுவனங்களிடமிருந்து திருப்பப்பட வேண்டும். எனினும், 2017 ஆம் ஆண்டிற்காக அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,061,545 சம்பளங்கள் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 2014 பெப்ரவரி 12 ஆம் திகதிய பிஎவ்டி/ஆர்ஈடி/01/04/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 - 2021 காலப்பகுதியை மேவுகைசெய்து கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்கென செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் பின்வரும் குறைபாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவதானிக்கப்பட்டன.

(i) மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரேரிக்கப்பட்ட பாரிய முதலீடுகள் இயலுமை கட்டியெழுப்பல் மற்றும் பாரிய பெறுகைகள் உள்ளடக்கி வருடாந்த பெறுகை திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடன் மீள் கொடுப்பனவு திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதியாண்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய வணிக நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாமல் ஒவ்வொரு பிரிவிற்கும் நிதிசார் இலக்குகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(v) இலக்குகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்கள் இனங்காணப்படாமை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையே முக்கிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 5.3 பெறுகைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றத் தவறுதல். |
| | | (ii) | செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் அவற்றிற்கான மிகையறவீடுகளை கணக்கிடாமை. |
| | | (iii) | கட்டுப்பாட்டு கணக்குகளை இணக்கஞ் செய்வதற்கும் குறித்த திகதிகளில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கும் தவறியமை |
| (ஆ) | பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை மீதான கட்டுப்பாடு | (i) | கடன்பட்டோர் மீதான மந்தமான கட்டுப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | அரசாங்கக் கடன்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருந்தன. |
| | | (iii) | நீண்டகால நிலுவையாகவுள்ள கடன்பட்டோர்கள் |
| | | (iv) | உரிய வாடிக்கையாளர்களிற்கு சிட்டை தயாரித்து சமர்ப்பிப்பதில் காலதாமதம். |
| | | (v) | கொள்வனவு மற்றும் ஆரம்ப முற்பணங்கள் நிர்மாண பிடிகாசுகள் மற்றும் அதன் மீதான வரிகள் மற்றும் மிகையறவீடுகளை நீண்டகால நிலுவையாகவிருந்தது. |
| (இ) | ஆளணி முகாமைத்துவம் | (i) | ஏனைய நிறுவனங்களிற்கு மனித வளங்களை விடுவித்தல். |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல். |
| | | (iii) | ஒப்பந்த அடிப்படையில் சிரேஸ்ட முகாமைத்துவ பதவிக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல். |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | 2014 இலிருந்து பொலன்னறுவையில் அஸ்பலற் இயந்திரம் விளைவற்றிருத்தல். |
| | | (ii) | ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அனைத்துக் காணிகளினதும் உரிமைத்துவத்தை சுவீகரிப்பதற்கு தவறியமை. |
| (உ) | நிதி முகாமைத்துவம் | | மந்தமான தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளை மிஞ்சிய குறுங்கால நிதிப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வங்கி மேலதிகப்பற்று வசதிகளை பெறுதல். |
| (ஊ) | பெறுகை செய்முறை | | பிரதான பெறுகைத் திட்டம் இல்லாமை மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதில் காலதாமதம் |
| (எ) | இருப்புக் கட்டுப்பாட்டு | (i) | முறையான இருப்புக் கட்டுப்பாடு முறைமை அறிமுகம் செய்தல் |
| | | (ii) | பௌதீக ரீதியான இருப்பு மீதியையும் ஒவ்வொரு மற்றும் அனைத்து வேலைத்தளத்தினதும் பேரேட்டு இருப்பு மீதியையும் கணக்கிணக்கம் செய்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | முறையான கூறுவிலை கோரல் முறைமையானது விசேடமாக இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உதிரிப் பாகங்களிற்குப் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |